## தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதித்து அத்துமீறும்

# ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!




சைதையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தயாநிதி மாறன் எம்.பி., துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி, மாவட்டச் செயலாளர்கள் மயிலை த.வேலு, நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், இரா.கிரிராஜன், கனிமொழி என்.வி.என்.சோமு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட கழகம் சார்பில் , தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும், அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம், கடலூர் தலைமை தபால் நிலையம் அருகில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா ,கடலூர் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன்,முன்னாள் எம்.எல்.ஏ., துரை கி.சரவணன் முன்னிலை வகித்தனர். வட்ட,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்துகொண்டனர்.



சிவகங்கை அரண்மனை வாசல் முன்பாக சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் ஆளுநரின் போக்கினை கண்டித்து முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், காரைக்குடி மாநகர துணை மேயர் என் குணசேகரன் உட்பட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க கள்ளக் கூட்டணியையும் கண்டித்து தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கரன்கோவில் தபால் நிலையம் முன்பு நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னாள் அமைச்சர் தங்கவேலு தலைமையில் செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட பொருளாளர் சரவணன், துணை செயலாளர் புனிதா, மனோகரன், ராஜதுரை, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பூசைத்துரை, பெரியதுரை, வெள்ளத்துரை, கிறிஸ்டோபர், ராமச்சந்திரன், பால்ராஜ், சேர்ம துரை, நகர செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி,பேரூர் செயலாளர் மாரிமுத்து,குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் உள்பட 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க.பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்தும் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ரயில் நிலையம் அருகில் மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் கலைகதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில மாவட்ட பொருளாளர் ஷெரிப், துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, சேசுராஜன், சேக்தாவுது, முத்துப்பாண்டி, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சமுத்திரபாண்டியன், கதிர்வேல், அருள், இராஜேஸ்வரன், கரீம், தமிழ்ச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் செல்லத்துரை, சிவன்பாண்டியன், திவான் ஒலி, சீனித்துரை, அன்பழகன், ரவிசங்கர், அழகு சுந்தரம்,மாரி வண்ணமுத்து,ஜெயக்குமார்,நகர செயலாளர்கள் சாதிர், கணேசன், வெங்கடேசன் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர் கள்,நிர்வாகிகள், பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகி கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்பட 1000 த்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும் ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரை காப்பாற்றிடவும் ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றவும் வித்தைகளை செய்யும் அதிமுகபாஜக கள்ளக்கூட்டணியைக் கண்டித்தும் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் தலைமை கழக செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் கலந்து கொண்டு உரையாற்றினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், பூந்தமல்லி தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ் மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, மா.ராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சன்.பிரகாஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், டி.தேசிங்கு, என்.இ.கே.மூர்த்தி, டி.ராமகிருஷ்ணன், ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.ரவி, தி.வே.முனுசாமி, தங்கம் முரளி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டோன்மெண்ட் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ. தலைமையிலும், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ வரவேற்புரையிலும், நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் சுப.வீரபாண்டியன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். அருகில் மாவட்ட துணை செயலாளர்கள் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், படப்பை ஆ.மனோகரன், க.வசந்தகுமாரி, கோ.காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரை அவரை காப்பாற்றும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணி கண்டித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் ரயில்வே நிலையம் அருகில் மாவட்ட அவைத்தலைவர் கோ. திராவிட பக்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி. ஆதிசேஷன், மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், ஜெயபாரதி, உதயமலர் பொன் பாண்டியன், மிதுன் சக்கரவர்த்தி, பா. சிட்டிபாபு, கே.எம். சுப்பிரமணி, ராஜேஸ்வரிரவிந்தநாத், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், கூளூர் ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், கா.அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், கிறிஸ்டி அன்பரசு, என்.கிருஷ்ணன், வி.வினோத்குமார், சி.என்.சண்முகம், பெ.பழனி, பி.டி. சந்திரன், கே. ராஜேந்திரன், டி. ஆர். கே. பாபு, மற்றும் மாவட்ட அணிகளை அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்.